# மீட்பின் அன்னை தமிழ் கத்தோலிக்க மறைத்தளம்

# Our Lady of Deliverance Tamil Catholic Mission

மீட்பின் அன்னை மறைத்தளத்தின் 20வது கூட்டம் 19-09-2010 அன்று ஆலயத்தின் சிறிய மண்டபத்தில் மாலை 6:30 மணிக்கு அருட் தந்தை யூட் அமலதாஸ் அடிகளாரின் ஆரம்ப செபத்துடன் ஆரம்பமானது. பங்கு தந்தை TORONTO சென்றிருந்தமையால் அன்றைய தினம் சமூகம் தரவில்லை. மேலும் திரு மோசஸ் சூசை மாணிக்கம், திரு ஜீவன், திருமதி கலிஸ்ரா தவராஜா, ஆகியோர் சமூகம் தரவில்லை. திரு விஜயகுமார் அவர்களுக்கு பதிலாக திரு வெனாசியஸ் அவர்கள் சமூகம் தந்திருந்தார். கடந்த மாத கூட்ட அறிக்கை செயலாளரால் வாசிக்கப்பட்டது. சில திருத்தங்களின் பின்னர் திரு யூலியன் அவர்கள் முன்மொழிந்தார். திரு தேவா அவர்கள் வழிமொழிந்தார். அருட்தந்தை அவர்கள், சில முக்கிய விடயங்களை அன்றைய கூட்டத்தில் பகிர்ந்து கொள்ளுமாறு பங்குதந்தை தன்னிடம் கூறியவற்றில் முதலாவதாக எமது மீட்பின் அன்னை மறைத்தளத்தினால் ஒவ்வொரு வருடமும் முன்னெடுக்கப்படும் ஒளிவிழா சம்பந்தமான விடயங்கள், அத்தோடு ஒளிவிழாவிற்கு “ஒளியாம் இறையே வாராய்” என்கின்ற மையப்பொருளை தந்தை வைத்துள்ளாா என்றும் தெரிவித்தார். இதில் ஏதாவது மாற்றம் யாராவது செய்ய விரும்பினால் கூறலாம் எனக் கேட்டதற்கடைவாக, அது நல்ல மையப்பொருள் என்பதால் மாற்றம் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. மேலும் ஒளிவிழாவினை எமது ஆலயத்தில் வைப்பதா அல்லது வெளியில் மண்டபம் எடுத்து வைப்பதா என்ற வகையில் இந்த முறை வெளியில் மண்டபம் எடுத்து வைக்கலாம் என கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

வெளி மண்டபம் எடுத்து வைப்பதாயின் அதனை ஒழுங்கு செய்யும் பொறுப்பை ஒருவர் பொறுப்பெடுத்துக் கொள்ள வேண்டும். அந்த வகையில் செல்வன் சாள்ஸ் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டார். மார்கழி மாதம் 2ம், 11ம் திகதி சனிக்கிழமை வருகின்றபடியால் அந்த நாளை ஆயத்தம் செய்வதற்கு விசாரித்துக் கொள்வதாகவும் செல்வன் சாள்ஸ் அவர்கள் கூறினார். ஒளிவிழா நிகழ்ச்சிகள் நல்ல முறையிலும் அர்த்தமுள்ளதாகவும் அமையவேண்டும். ஒவ்வொரு வகுப்பு மாணவர்களாலும் ஆசிரியர்கள் நிகழ்ச்சிகள் வழங்குவார்கள் எனவும் திரு அம்புறோஸ் அவர்கள் கூறினார்கள். நிகழ்ச்சி நிரல்களை விரைவில் அட்டவணைப்படுத்தினால் நிகழ்ச்சிக்குரியவர்கள் தங்களை தயார் செய்து கொள்ள இலகுவாக இருக்கும் என திரு யூலியன் அவர்கள் கூறினார். மேலும் மாணவர்களுக்கான ஒளிவிழா பேச்சுப் போட்டியின் நடுவர்களை பங்குதந்தை ஒழுங்கு செய்வார். ஒவ்வொரு பிரிவின் மாணவர்களையும் அதன் ஆயத்தங்களையும் ஆசிரியர்கள் ஒழுங்கு செய்வார்கள் என திரு அலெக்ஸ் கூறினார். மற்றும் ஒளிவிழா கன்டீன் வழமையாக மரியாயின் சேனையினர் செய்து வந்தார்கள். இந்த முறை புதிய மாற்றம் அதனை நிர்வாக சபை உறுப்பினர்கள் பொறுப்பெடுத்துக் கொள்வதாக திரு பெனாசியஷ் அவர்கள் கூறினார். ஒளிவிழாவின் ஒலி அமைப்பை பங்குதந்தை ஒழுங்கு செய்வார் எனவும் கலந்துரையாடப்பட்டது.

இரண்டாவதாக கலண்டர் (நாட்காட்டி) கலண்டரின் அட்டைப்படம் தயார் செய்வதற்கு பங்குதந்தையுடன் இணைந்து திரு யூலியன் அவர்கள் ஒத்துழைப்பு வழங்குவதாக கூறினார். கலண்டர் ஒப்பனைக்கு தன்னுடன் இளைஞர்கள் இணைந்து ஒத்துழைப்பு வழங்கும்படியும், வேறு ஏனைய முக்கிய நிகழ்வுகளை கலண்டரில் போடவேண்டுமானால் ஒவ்வொரு சபையாலும் அந்த நிகழ்வுகளை எழுத்தில் வழங்கினால் அதனை போடலாம் எனவும், அத்தோடு மாதத்தில் ஒருமுறை சிறுவர்களுக்கான திருப்பலி எத்தனையாவது வாரம் வைக்கலாம் என்றும் அதனை எவ்வாறு கலண்டரில் போடலாம் எனவும் கலந்துரையாடப்பட்டது.

மேலும் எமது மீட்பின் அன்னை மறைத்தளத்தின் பங்கு மக்கள் அனைவரும் ஒன்றுகூடி இணைந்து ஆலயத்தையும் அதனைச் சூழ உள்ள பகுதிகளையும் சுத்தம் செய்யும் சிரமதானம் எதிர்வரும் **October** மாதம் 2வது வாரம் சனிக்கிழமை அன்று இடம் பெறும் என்றும், அதற்கான அறிவித்தலை திருப்பலியின் பின்னர் பங்கு மக்களுக்கு தெரிவிக்கும் படியும் அன்றைய தினம் கலந்துரையாடப்பட்டது. அத்துடன் அன்றைய தினம் சிரமதானத்தில் முக்கியமாக மறைத்தள மாணவப்பிள்ளைகள் ஆர்வத்துடன் செயற்படும் சிரமதானமாக இருக்கும் எனவும் சிரமதானத்தில் கலந்து கொள்ளும் அனைவருக்கும் உணவு பரிமாற்றம் சம்பந்தமான விடயம் நிர்வாக சபையுடன் உரையாடிக் கூறுவதாக திரு பெனாசியஸ் அவர்கள் கூறினார்.

மற்றும் எமது மீட்பின் மறைத்தளத்தை மேலும் மெருகூட்டி வளர்க்க அடுத்த ஆண்டிற்கான பங்குசபை உறுப்பினர்கள் தேர்வு சம்பந்தமான விடயம் பங்கின் வளர்சிக்கும் அதன் முன்னேற்றத்திற்கும் நன்கு ஒத்துழைப்பு வழங்ககூடிய பங்குதந்தையுடன் கலந்தாலோசித்து செயற்படக் கூடியவர்களை பங்குசபை உறுப்பினர்கள் தங்களுடைய அபிப்பிராயத்தை தனிப்பட்ட ரீதியில் பங்குதந்தைக்கு கூறலாம் எனவும் அத்தோடு பங்குதந்தை பங்குசபை உறுப்பினர்களை தேர்வு செய்யலாம் எனவும் அன்றைய தினம் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. மேலும் முக்கியமான பணியில் இருப்பவர்கள் தங்கள் பணியைத் தொடர்ந்து செய்யும் ஒருவரை தயார் செய்ய வேண்டும் எனவும் எதிர்வரும் கூட்டத்தில் சில நிமிடங்க்ள தன்னுடைய பணியைப் பற்றி பங்குதந்தையுடன் கலந்துரையாட தரும்படி திரு அம்புறோஸ் அவர்கள் கூறினார். இறுதியாக திரு அமீர் அவர்களின் இறுதி ஜெபத்துடன் கூட்டம் இனிதே நிறைவேறியது.

| | |
|---|---|
| அருட். தந்தை அன்றூா தவராஜசிங்கம் | திரு. நெல்சன் ஆரோக்கியநாதன் |
| பங்குத்தந்தை | செயலாளர் (பங்குச்சபை) |
| மீட்பின் அன்னை மறைத்தளம் | மீட்பின் அன்னை மறைத்தளம் |